www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination – 2022

FWC

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் I<br>Christian Civilization I | Two Hours<br>Gr -13 (2022) | 49 T I |

### அறிவுறுத்தல்கள்:
- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட
  விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விடைத்தாளில் புள்ளடி இடுக.

01. நாகரிகத்தின் தொட்டில் எனப்படுவது
(1) எகிப்து (2) உரோமை (3) கிரேக்கம்
(4) இந்துப்பள்ளத்தாக்கு (5) மொசப்பத்தேமியா

02. பின்வரும் கூற்றுக்களை அவதானித்து விடை தருக.
A. பெந்தகோஸ்தே ஓர் அறுவடை விழாவாகும்.
B. பாஸ்கா மார்ச் ஏப்ரல் காலப்பகுதியில் கொண்டாடப்படும்.
C. ஹனுக்கா ஓர் அறுவடை விழாவாகும்.
D. கூடாரத்திருவிழா "சுக்கோத்" எனப்படும்.
E. பெந்தகோஸ்தே "ஜோம்கிப்பூம்" என்றும் அழைக்கப்படும்.
இவற்றில் யூத விழாக்களுடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?
1) A,B,D 2) B,D,E 3) A,C,D 4) C,D,E 5) A,B,E

03. யூத கலாச்சாரத்தில் செல்வாக்கு செலுத்திய பழைமையான இரு பெறும் நாகரிகங்கள்
(1) சீன நாகரிகமும் - சிந்துவெளி நாகரிகமும்
(2) ஐரோப்பிய நாகரிகமும் - தைக்கிறிஸ் நாகரிகமும்
(3) நைல் நதி நாகரிகமும் - யூப்பிட்டிஸ் டைக்கிறிஸ் நாகரிகமும்
(4) ஆபிரிக்க நாகரிகமும் - ஐரோப்பிய நாகரிகமும்
(5) இலத்தீன் அமெரிக்க நாகரிகமும் - நைல் நதி நாகரிகமும்

04. புனித பவுல் 2ம் பயணத்தை ஆரம்பித்த இடம்
(1) எருசலேம் (2) உரோம் (3) கொரிந்து
(4) தெசலோனிக்கேயா (5) அந்தியோக்கியா

05. ஆரம்ப கால கிறிஸ்தவர்கள் பயன்படுத்திய அடையாளங்களும் அவை குறிக்கும் பொருள்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் அடையாளத்தின் பொருள் பிழையாக காட்டப்பட்டுள்ள விடை எது?
(1) மயில் நிந்திய வாழ்வு (2) புறா ஆன்மா (3) மீன்- கிறிஸ்து
(4) சிலுவை- கிறிஸ்தவ விசுவாசம் (5) தோளில் ஆடுடன் இளைஞன் - நல்ல ஆயன்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

06. கார்மேல் சபையைச் சேர்ந்த புனித அவிலாத்திரேசால் பல மடங்களை ஸ்தாபிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.
   1) இச்சபையில் முழுநேரம் மௌனம் காக்கப்பட்டமை யாவாகும்.
   2) இச்சபையினர் கடுமையான வறுமையில் வாழ்ந்தமையாலாகும்.
   3) இச்சபையினர் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றமை.
   4) இச்சபையினர் மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்தமை.
   5) இச்சபையினர் முதல்வர் அங்கு இடம்பெற்ற சீர்திருத்தத்தை கண்டு மகிழ்ச்சி கொண்டமையாலாகும்.

07. கிறிஸ்தவர்களுக்கு எதிரான கலாபனை யுகம் முடிவு பெற்றது.
   (1) பேதுருவின் மறை சாட்சியத்துடன்
   (2) பவுலின் மறை சாட்சியத்துடன்
   (3) மிலான் சாசனத்துடன்
   (4) வட ஐரோப்பிய கோத்திரங்கள் கிறிஸ்தவத்திற்கு திரும்பியமையுடன்
   (5) கன்டபெறி அகுஸ்தினாரின் போதனையுடன்

08. மரியா இறைவனின் தாய் என பிரகடனப்படுத்திய பொதுச்சங்கம்
   1) எருசலேம் 2) நிசேயா 3) ஏபேசு
   4) கொன்ஸ்நாந்தி நோபிள் 5) கல்சடோன்

09. திருச்சபை வரலாற்றின் மத்திய யுகம் என கணிக்கப்பட்ட காலம் என கொள்ளப்படுவது?
   (1) கி.பி 700 – 1850
   (2) கி.பி 800 – 1700
   (3) கி.பி 1300 – 1500
   (4) கி.பி 1200 – 1500
   (5) கி.பி 800 – 1500

10. கீழைத்தேய மேலைத்தேய துறவற வாழ்வுக்கான ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்திய இருவரும் யாவர்?
   (1) புனித பசில், புனித பெனடிட்
   (2) புனித தேட்ஸ் சின்னப்பர், புனித பக்கோமியாஸ்
   (3) எகிப்து அந்தோனியார், புனித பெனடிட்
   (4) புனித பக்கோமியாஸ், புனித பசில்
   (5) புனித பெனடிக்ற், புனித பக்கோமியாஸ்

11. புனித பவுலின் அடிப்படை மறைபரப்பு முறைகளாவன
   (1) மறைபரப்புப் பயணங்களும், நற்செய்தி எழுதுவதும்
   (2) திருமுகங்கள் எழுதுவதும் யூதர்களுக்கு போதிப்பதும்
   (3) மறைபரப்புப் பயணங்களும் திருமுகங்கள் எழுதுவதும்
   (4) சமூக உருவாக்கங்களும் சபை உருவாக்கமும்
   (5) மறை பரப்புப் பயணங்களும் யூதர்களுக்கு போதிப்பதும்

12. பிரான்ஸிஸ்கன் சபையின் தொடக்ககால வாழ்க்கை முறையை மீண்டும் வலியுறுத்த புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் பின்பு நிறுவப்பட்ட சபை?
   (1) வின்சென்ரியன் சபை (2) கார்மேஸ் சபை (3) கப்புச்சின் சபை
   (4) யேசு சபை (5) சலேசியன் சபை



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

13. யூத தலைமைச் சங்கத்தின் செயல்முறைபற்றிக் கூறும் நூல்
    1) இணைச் சட்ட நூல் 2) அடிப்படை நூல் 3) மிஸ்னா நூல்
    4) லேலியர் ஆகமம் 5) டிடாக்கே நூல்

14. பவுல் கொரிந்திய திருமடலில் குறிப்பிட்ட கருத்துக்களில் பொருத்தமற்றது
    (1) அன்பின் உன்னதம்
    (2) கிறிஸ்தவ ஒற்றுமை
    (3) இயேசுவின் உயிர்ப்பு
    (4) கிறிஸ்தவ குடும்ப வாழ்வு
    (5) கிறிஸ்தவ சகோதரத்துவம்

15. ஹெர்சிம் மலை அமைந்துள்ள பகுதி
    (1) சமாரியா (2) யூதேயா (3) மேல்கலிலேயா
    (4) கீழ்கலிலேயா (5) யோர்தான்

16. உரோமைக் கலாபனைக் காலத்தில் கடவுளை சுமப்பவர் என அழைக்கப்பட்ட மறைசாட்சி யார்?
    (1) புனித பேதுரு (2) புனித திருமொத்தேயு (3) புனித ஜஸ்ரின்
    (4) புனித சிசிலியா (5) புனித அந்தியோக்கு இஞ்ஞாரியார்

17. கிறிஸ்தவத்தின் தொடக்க காலத்தில் காணப்பட்ட கிரேக்க மெய்யியல் தத்துவங்கள் மூன்றையும் கொண்ட தெரிவு யாது?
    (1) இஸ்தோயிசம், பிளேட்டோனிசம், நொஸ்திகம்
    (2) இஸ்தோயிசம், நொஸ்திகம், அரிஸ்டோனிசம்
    (3) நொஸ்திகம், டொசற்றிசம், மனிக்கேயம்
    (4) பிளேட்டோனிசம், இஸ்தோனிசம், மனிக்கேயம்
    (5) பிளேட்டோனிசம், அரிஸ்டோரிசம், எப்பிக்கூரியநிசம்

18. கி.மு 722ல் வட அரசைக் கைப்பற்றியவர்கள்?
    (1) அரீரியர்கள் (2) பபிலோனியர்கள் (3) பாரசீகர்கள்
    (4) கிரேக்கர்கள் (5) உரோமயர்கள்

19. கிறிஸ்தவர்களுக்கு எதிரான கலாபனை யுகம் நிறைவுக்கு வந்தது.
    (1) பேதுருவின் மறை சாட்சியத்துடன்
    (2) பவுலின் மறை சாட்சியத்துடன்
    (3) மிலான் சாசனத்துடன்
    (4) வட ஐரோப்பிய கோத்திரங்கள் கிறிஸ்தவத்திற்கு திரும்பியமையுடன்
    (5) கன்டபெறி அகுஸ்தினாரின் போதனையுடன்

20. அயர்லாந்தின் நற்செய்தியை பரப்பி சுதேச குருக்களின் உருவாக்கத்திற்கு வித்திட்ட புனிதர்?
    (1) புனித பொனிபஸ்
    (2) புனித பற்றிக்
    (3) புனித கொலம்பா
    (4) புனித ஹன்ட பெரி அகுஸ்ரீனார்
    (5) புனித அனஸ்கா

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

21. கிழக்கின் திருத்தூதர் என அறியப்படுவரும் இந்தியா ஜப்பான் ஆகிய நாடுகளில் நற்செய்தி அறிவித்தவருமான புனிதர்
    (1) புனித இக்னேஷியஸ் லொயலா இஞ்ஞாசியார்
    (2) புனித ஜோசவாஸ்
    (3) புனித பிரான்ஸிஸ் சேவியர்
    (4) புனித பிரான்ஸிஸ் அசிசி

22. யூத திருமணங்கள் பற்றிய கருத்துக்களை அடிப்படையாக கொண்ட விடைத் தொகுதி
    A. ஒரு யூத ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமண வாழ்வே சிறந்த இலட்சியம் என யூதர்கள் கருதினர்.
    B. ஆண் 15 வயதிலும் பெண் 12 வயதிலும் திருமணம் செய்யலாம்.
    C. திருமண ஒப்பந்தம் ஆரால் எனப்பட்டது.
    D. மணமகன் பெண்ணின் நந்தைக்கு கொடுக்கும் கொடை மோகர் எனப்பட்டது.
    E. திருமண வீட்டிற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு திருமண ஆடை வழங்கப்படும்.
    இதில் சரியான கூற்று
    1) A,B,C 2) A,C,E 3) A,D,E 4) B,D,E 5) C,D,E

23. யோவான் நற்செய்தியின் படி யேசுவின் மரணத்திற்கு பொறுப்பானவர்கள்
    (1) உரோமையர் (2) செலூட்ஸ் (3) பரிசேயர்
    (4) எஸ்ஸினியர்கள் (5) யூதர்கள்

24. திருச்சபையின் முதல் மூன்று நூற்றாண்டுகளும் வீர வரலாற்று காலம் என அழைக்கப்பட்டமைக்கான முக்கிய காரணம்.
    (1) பல உரோமைய பேரரசர்கள் கலாபனைகளை எதிர் கொண்டமை.
    (2) உரோமைக் கலாபனைகளை தொடர்ந்து யூதக்கலாபனைகள் இடம்பெற்றமை.
    (3) வழிபாடுகள் தடை செய்யப்பட்டு கிறிஸ்தவர்களின் உடமைகள் பறி முதல் செய்யப்பட்டு மக்கள் அஞ்சாமை.
    (4) பல கலாபனைகளுக்கும் முகங்கொடுத்த போதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்க விளக்கங்கள் அளிக்கப்பட்டமை.
    (5) பல கலாபனைகளுக்கு மத்தியில் திருச்சபை வேகமாக பரவியமை

25. ஒருவன் தானும் தூய்மையடைந்து மற்றவர்களையும் தூய்மையாக்க வேண்டும் என யேசுவால் பணிக்கப்பட்ட சம்பவமாக திகழ்வது
    (1) 5000 பேருக்கு உணவழித்தல்
    (2) இறந்தோரை உயிர்ப்பித்தல்
    (3) சமாரியப் பெண்ணுடன் உரையாடல்
    (4) பாடுகள் மரணவேளையில்
    (5) பாதங்கழுவிய சந்தர்ப்பத்தில்

26. மிஸ்னா என்னும் நூலில் உள்ளடக்கப்படாத பகுதி.
    1) குற்றவாளி தொடர்பாக 2 சாட்சியங்கள் தனித்தனியே விசாரிக்கப்பட வேண்டும்.
    2) மரண தண்டனை தீர்ப்பாயின் 2 நாட்களுக்கு பின்னரே நிறைவேற்றப்பட வேண்டும்.
    3) குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாய்மூலத்தை வைத்து தீர்ப்பிடக்கூடாது.
    4) திருவிழாக்காலங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் இரவு வேளை கூட்டப்பட வேண்டும்.
    5) ஆலயத்தில் அதற்காக அமைக்கப்பட்ட மண்டபத்திலேயே கூட்டப்பட வேண்டும்.



agaram.lk

www.agaram.lk

27. மலைபொழிவில் யேசுவால் முன்வைக்கப்பட்ட மூன்று நடைமறைகள் எவை?
(1) தருமம், இறைவேண்டல், நோன்பு
(2) இறைவேண்டல், நோன்பு , பரித்தியாகம்
(3) இறைவேண்டல், பரித்தியாகம், தருமம்
(4) தருமம், நோன்பு, பரித்தியாகம்
(5) நோன்பு, இறைவேண்டல், பரித்தியாகம்

28. பின்வருவனவற்றில் பொதுச்சங்கங்களையும் அதற்கொப்பான பேதங்களையும் கொண்ட சரியான சோடி எது?
(1) எபேசு – நெஸ்தோரியர் பேதகம்
(2) நிசேயா – யுத்தகேய பேதகம்
(3) எருசலேம் - பெலாஜிய பேதகம்
(4) கல்சடோன் - ஆரிய பேதகம்
(5) எபேசு – ஆரிய பேதகம்

29. திருச்சபையின் முதல் நியமனம் பெற்ற பணியாளர்கள்
(1) திருத்தூதர்கள்
(2) திருத்தொண்டர்கள்
(3) மேய்ப்பர்கள்
(4) மூப்பர்கள்
(5) ஆயர்கள்

30. திருச்சபையின் வரலாற்றில் கிழக்கு, மேற்கு என சபையின் பிளவு ஏற்பட்ட காலம்
(1) கி.பி 1020
(2) கி.பி 1030
(3) கி.பி 1054
(4) கி.பி 1058
(5) கி.பி 1060

31. முறைமைவாதிகள் என அழைக்கப்பட்டவர்கள்
(1) மெதடிஸ்தர்
(2) பப்டிஸ்
(3) அங்கிலிக்கள்
(4) இரட்சணிய சேனை
(5) லூத்தரன் சபை

32. திருச்சபை வரலாற்றின் முக்கியம் வாய்ந்த இருவரைக் கொண்ட தொகுதி.
(1) புனித அகுஸ்தீனார், புனித அக்குவைனார்ஸ்
(2) லூத்தர் கல்வின்
(3) பெனடிட், பேதுரு
(4) பிலிப்பு, பேதுரு
(5) பேதுரு, பவுல்

agaram.lk

33. இந்தியாவில் உண்டான இலத்தீன் திருச்சபை வழிபாட்டு முறை?
(1) கீழைத்தேய மரபுமுறை சார்ந்தது.
(2) நெஸ்தூரிய மரபு முறை சார்ந்தது.
(3) மேலைத்தேய மரபு முறை சார்ந்தது.
(4) கிழக்கு சேரிய மரபு முறை சார்ந்தது.
(5) லூதரின் மரபு முறை சார்ந்தது.

34. வரலாற்றின் சாதோக் தலைமைக் குருவானவர் நியமனம் பெற்ற காலம்
(1) ஆரோன் காலத்தில்
(2) தாவீதின் காலம்
(3) சாலமோன் காலம்
(4) சவுல் காலம்
(5) சாமுவேல் காலம்

35. தென்னரசில் முதல் அரசனாக செயற்பட்டவர்?
(1) எரோபோவாம்
(2) ரெகபேயம்
(3) ஆகாசு
(4) ஓம்றி
(5) ஜெறோபோவாம்

36. பின்வருவனவற்றுள் கிரேக்கர் இஸ்ராயேலை ஆட்சி செய்த காலத்தில் இடம்பெறாத விடயம்.
(1) பல நகரங்களின் அரங்கங்கள் கட்டப்பட்டமை.
(2) விளையாட்டு அரங்குங்கள் கட்டப்பட்டமை.
(3) யூதர்கள் கிரேக்க மருத்துவ முறைகளைப் பின்பற்றியமை.
(4) கிரேக்கருக்கு எதிராக யூதர்கள் பேசியரின் ஆட்சியை மீள ஏற்படுத்த முயன்றமை.
(5) சில கிரேக்க பழக்கவழக்கங்கள் பின்பற்றப்பட்டமை.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

37. “மெசியா” என்னும் பதத்தின் சொற்பிறப்பு

1) மீட்பர்
2) இறுதிக்காலத்தில் வருபவர்
3) ஆண்டவரின் நாளில் வருபவர்
4) அபிஷேகம் செய்யப்பட்டவர்
5) அரசர்

38. ‘மக்கபே’ என்னும் சொல்லின் பொருள்

(1) மீட்பை எடுத்துரைப்பது
(2) இவர் வழியாக இஸ்ராயேலர் மீட்பு பெறுவர்
(3) அபிஷேகம் செய்யப்பட்டவர்
(4) நித்திய மீட்பர்
(5) ஆண்டவரே கடவுள்

39. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A- முழு நாளும் மௌனம் பேணுதல்
B- நீண்ட நேரம் செபத்தில் செலவிடல்
C- எப்போதும் சமயம் பற்றிய பொது உரையாடல்களை நடத்துதல்.
D- நோன்பைக் கடைப்பிடித்தல்
E- தினமும் திருப்பலியில் பங்கு கொள்ளல்.

மேலுள்ளவற்றுள் ஆரம்பகால ஆச்சிரம வாழ்வின் பண்புகளாகக் கருதக்கூடியன

(1) A,B,D (2) A,C,E (3) B,C,D (4) B,D,E (5) C,D,E

40. பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற் கொள்க.

A- இக்கல்லூரியில் விளக்கமளிப்பதற்காக பிளேட்டோவின் மெய்யியல் பயன்படுத்தப்பட்டது.
B- இக்கல்லூரியில் யோவானின் நற்செய்திக்கு முக்கிய இடம் வழங்கி
C- இக்கல்லூரியில் விவிலியத்திற்கு விளக்கமளிக்க உருவக முறையைப் பயன்படுத்தினர்.
D- இக்கல்லூரியை நிறுவியவர் குருவாகிய லூரியின் எனப் பாரம்பரியம் கூறுகின்றது.
E- எருசலேம் சிறில் இக்கல்லூரியின் இறையியலாளர் ஆவார்

மேற்படி கூற்றுக்களுள் அலெக்சாந்திரிய கல்லூரி பற்றிய சரியான கூற்றுக்களாவன.

(1) A,B,C (2) A,B,D (3) A,B,E (4) A,C,E (5) B,C,D

41. புராதன நிப்பூர் நகரம் காணப்பட்ட இடம்

(1) எகிப்து
(2) படிலோனியா
(3) யோர்வான்
(4) கிரேக்கம்
(5) ஏதோம்

42. கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A- உரோமர்கள் ஜனவரி 06ஆம் திகதியைச் சூரியக்கடவுளின் பிறப்பு நாளாகக் கொண்டாடினர்.
B- கி.பி முதலாம் நூற்றாண்டு முதல் கிறிஸ்தவர்கள் டிசம்பர் 25 ஆம் திகதியை கிறிஸ்து பிறப்பு நாளாக கொண்டாடினர்.
C- உரோமர் தங்கள் அரசருக்கும் படைத்தலைவருக்கும் ஒற்றைக் காலில் முழந்தாளிட்டு மரியாதை செலுத்துவதை கிறிஸ்தவ திருவழிபாடு உள்வாங்கியது.
D- கிறிஸ்தவ திருவழிபாடு பல உரோமைய வழிபாட்டு மரபுகளை உள்வாங்கியது.
F- வழிபாட்டு மொழியாக எல்லா ஆலயங்களிலும் இலத்தீன் பயன்படுத்தப்பட்டது.

மேற்குறித்தவற்றுள் கிறிஸ்தவ வழிபாட்ட முறைகள் பற்றிய சரியான கூற்றுக்களாவன

(1) A,B (2) B,C (3) B,C (4) C,D (5) D,E



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

43. அயர்லாந்தில் நற்செய்தியைப்பரப்பி சுதேச குருக்களின் உருவாக்கத்திற்கு வித்திட்ட புனிதர்?
(1) புனித பொனியஸ் (2) புனித பற்றிக் (3) புனித கொலம்பா
(4) புனித கன்ரிபெறி அகுஸ்தீனார் (5) புனித அனஸ்கா

44. வட அரசில் இறைவாக்கு உரைக்காத இறைவாக்கினர்
1) எலியா 2) எலிசா 3) எரேமியா
4) ஓசேயா 5) ஆமோஸ்

45. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A- உரோமப் பேரரசில் ஆட்சி மற்றும் நிர்வாக மொழியாக இலத்தீன் விளங்கியது
B- செய்துவாஜிந்து பழைய ஏற்பாட்டின் இலத்தீன் மொழிபெயர்பாகும்.
C- புல ஐரோப்பிய மொழிகளுக்கு இலத்தீன் தாய்மொழியாகும்.
மேற்குறித்தவற்றுள் இலத்தீன் மொழி தொடர்பான சரியான கூற்று /கூற்றுக்களாவன
(1) A மட்டும் (2) A, B (3) A,C (4) B,C (5) A,B,C

46. வட அரசின் இறைவாக்கினரை மட்டும் கொண்ட தொகுதி?
(1) ஆமோஸ், எரேமியா,எலியா
(2) எலியா, எசாயா, எசேக்கியர்
(3) எலிசேயு, எலியா, எரேமியா
(4) ஆமோஸ், ஓசே, எலியா
(5) எசாயா, எசேக்கியா, எரேமியா

47. யூதர்களின் மூல மொழி
1) எபிரேயம் 2) அரமேக் 3) இலத்தீன்
4) கிரேக்கம் 5) உரோமை

48. சீடத்துவம், குடும்பம் உருவாக்கப்பட்டதை யோவான் அடையாளப்படுத்தும் நிகழ்வு
(1) பிலாந்துவின் அறிக்கை
(2) இயேசுவின் அங்கிபகிர்தல்
(3) எல்லாம் நிறைவேறியது என்று கூறும் வேளை
(4) சிலுவையில் தாய் மரியாவும் சில பெண்களும் அன்புச் சீடனும் நின்ற வேளை
(5) யேசுவின் உருமாற்றம்

49. கத்தோலிக்க திருச்சபை என்பதை முதல் பயன்படுத்தினவர்?
(1) புனித ஜஸ்ரின் (2) புனித இரனேயூஸ் (3) புனித இஞ்ஞாசியா
(4) புனித பிலிக்ஸ் (5) புனித டயோனியுஸ்

50. நாலாம் கலாபனையில் கிறிஸ்தவ விசுவாசம் கட்டியெழுப்பியவர்களை கொண்ட தொகுதி
(1) யுஸ்தினார், சிசிலியம்மாள், போதினூஸ்
(2) இரனேயூஸ், பெலிசித்தா, பெர்ப்பெத்துவ
(3) பெலிக்ஸ், போதினூல், பெர்ப்பெத்துவ
(4) யுஸ்தினார், இரனேயூஸ், சிமியோன்
(5) அக்ன்ஸ், சிசிலியம்மாள், சிப்பிறியன்

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 4th Term Examination - 2022

FWC

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் II<br>Christian Civilization II | Three Hours<br>Gr -13 (2022) | 49 T II |

அறிவுறுத்தல்கள் :

❖ பகுதி 1 இலிருந்து **இரண்டு** வினாக்களையும், பகுதி 11 இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. (i) கிறிஸ்தவ வழிபாட்டில் தாக்கம் செலுத்திய உரோமைய வழிபாட்டு பழக்க வழக்கங்கள் நான்கினைத் தருக. (2 புள்ளிகள்)

(ii) யூத செபத்தின் (இறை வேண்டலின்) பண்புகள் நான்கினைத் தருக.. (4 புள்ளிகள்)

(iii) இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தில் பெண்களின் நிலை குறித்து விபரிக்குக. (6 புள்ளிகள்)

(iv) எகிப்து மற்றும் மொசப்பத்தேமிய நாகரிகங்கள், யூத கலாச்சாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தின என்பது பற்றி விளக்குக. (8 புள்ளிகள்)

02. (i) உரோமைய கலாபனையின் விளைவுகள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

(ii) சிலுவைப் போர் இயக்கத்திற்கு வித்திட்ட காரணிகள் நான்கினைத் தருக. (4 புள்ளிகள்)

(iii) ஐரோப்பிய பழங்குடியினரை மனந்திருப்புவதில் முனைப்பாக செயற்ப்பட்ட பெனடிக்கன் துறவற சபையினரின் பங்களிப்பினை விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) ஐரோப்பிய மிஷனரிமார் வெளிநாடுகளில் ஆற்றிய சேவைகளை விளக்குக. (8 புள்ளிகள்)

03. (i) புரட்டஸ்தாந்து இயக்கம் உண்டாவதற்கு காரணமாக இருந்த நால்வரைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் பின்பு ஐரோப்பாவில் தோன்றிய நான்கு துறவற சபைகளைப் பெயரிடுக. (4 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(iii) இலத்தீன் மொழியின் சிறப்பான பண்புகளை விபரிக்குக. (6 புள்ளிகள்)

(iv) முதல் ஐந்து நூற்றாண்டுகளில் திருச்சபையின் உலகளாவிய பண்பினை வெளிப்படுத்திய வரலாற்று நிகழ்வுகளை விவரிக்குக.

(8 புள்ளிகள்)

## பகுதி – II

04. (i) இயேசுவின் பாடுகள் மரணம் பற்றிய யோவானின் படிப்பினைகளை முன்வைக்குக.
(10 புள்ளிகள்)

(ii) இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பு கிறிஸ்தவர்களின் நம்பிக்கை வாழ்வை விருத்தி செய்து கொள்வதற்கு எவ்வாறு துணையாக அமையும் என்பதை விள்க்குக.

(10 புள்ளிகள்)

05.(i) ஆரம்பகால கிறிஸ்தவ சமூகம், சகோதரத்துவம், அன்பு தொடர்பில் அவர்கள் செயற்பட்ட விதத்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய உலகியல் சமுதாய நியதிகளில் உண்மைக் கிறிஸ்தவர்களின் வாழ்வு எவ்வாறு முன்மாதிரிகையாக அமைய வேண்டும் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

06. (i) கிறிஸ்தவத்தின் பரம்பலுக்கு புனித பவுலின் பயணங்களும், திருமுகங்களும் முக்கியமானவையாய் காணப்பட்டது இக்கருத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) தற்காலத்தில் இலங்கையராகிய கிறிஸ்தவர்கள் எவ்வாறான வாழ்க்கை முறையினை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது பற்றி கருத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

07. (i) ஐரோப்பியர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு திருச்சபை ஆற்றிய சேவைகளை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) இன்றைய சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கு திருச்சபை சார்ந்த பொது நிலையினரின் பணி எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி கருத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

08. (i) மத்தேயு நற்செய்திப்படி இயேசுவின் மலைப் பொழிவு பற்றி சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

(ii) நீதியான சமூகத்தில் மலைப் பொழிவினை ஆதாரமாகக் கொண்டு உம்மால் செயற்பட முடியுமா? கருத்துரைக்க.

(10 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!